**பூநகரி பிரதேச சபை**

**கிளிநொச்சி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 23 ஏப்ரல் 2018 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 24 ஆகஸ்ட் 2018 இல் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பூநகரி பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் அவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக்கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிநிலைமைக்கூற்றுக்களில் வருமான நிலுவை ரூபா 5,723,939 என காட்டப்பட்டுள்ள போதும் குறித்த வருமான நிலுவை தொடர்பான குறிப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 4,971,034 ஆக காட்டப்பட்டுள்ளமை தொடர்பில் ரூபா 752,905 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள் | | |
| (i) அத்தியாயம் III இன் விதி 66 | 5,723,939 | வருமான நிலுவைகளினை அறவிடுவதற்கு சபையின் செயலாளரால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) அத்தியாயம் V இன் விதி 140 | 749,223 | கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த முற்பணங்களினை உரியவாறு அறவிட்டுக்கொள்வது தொடர்பில் கடந்த 01 மாதம் தொடக்கம் 04 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி 178 (3) | | திறமையான ஒப்பந்த வேலைகளைச் செய்கின்ற சமூகமட்ட அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின் பெயர்களைக் கொண்ட பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) விதி 178 (5) | | கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும் போது பதிவஞ்சல் மூலமாக அல்லது தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலம் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | |
| நிதி ஒழுங்கு விதி 571 | 3,716,771 | 112 காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக கடந்த இரு வருடங்களுக்கு மேலாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் | | |
| (i) 30 திசெம்பர் 2008 இன் 30/2008 ஆம் இலக்கம் | 51,880 | அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 250,000 இற்கு மேற்பட்ட தொகை அலுவலருக்கு இடர்கடனாக வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது |

| | |
|---|---|
| (ii) 19 ஏப்ரல் 2017 இன் 03/2017 ஆம் இலக்கம் | கை விரலடையாள பதிவு இயந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் அரசாங்க அலுவலர்களது உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை குறித்து உறுதிப்படுத்துவது தொடர்பான அறிக்கைகள் நாளதுவரை பேணப்படாமை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 5,012,326 தொகையான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 4,809,086 ஆக இருந்தது.

### 2.2. வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான முலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரிகள் | 27,000 | - | 38,400 | - | - | - | 33,675 | - |
| (ii) வாடகைகள் | 3,915,045 | - | 2,530,644 | 723,580 | 3,450,030 | - | 1,373,999 | 601,357 |
| (iii) உரிமங்கள் | 690,450 | - | 800,952 | - | 562,600 | - | 665,935 | - |
| (iv) ஏனைய வருமானங்கள் | 4,680,000 | - | 4,118,198 | 562,481 | 5,189,700 | - | 4,054,656 | 1,135,044 |

#### 2.2.2 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 2,727,333 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 1,520,121 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறவேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 520,783 பெறுமதியான மூலதன வேலைகளினை நிறைவேற்றுவதற்கு கடந்த 1 தொடக்கம் 3 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### விளைவற்ற சொத்துக்கள்

கூட்டுமொத்தம் ரூபா 205,000 பெறுமதியான ஐந்து பொதுச் சந்தைகள் மற்றும் 05 கருவாட்டுக்கடைகள் என்பவற்றுக்கு கோரப்பட்டு வந்த கேள்வி கோரலுக்கமைய குத்தகைக்கு பெற எவரும் முன்வராத நிலையில் கடந்த 02 வருடங்களாக பயன்பாடற்ற நிலையிலுள்ளன.

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

#### பதவியணியிலுள்ள வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட 65 பதவியினர்களில் 37 ஆளணியினர்கள் உள்ளனர். இதன் காரணமாக 28 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமையால் அத்தகையவர்களால் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டிய வேலைகள் பாதிப்படைந்திருந்தது.

### 3.4 செயற்றிட்டத் தாமதங்கள்

மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 8,062,018 பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 08 மூலதன வேலைத் திட்டங்களினை நிறைவேற்றலில் 08 மாத காலதாமதம் அவதானிக்கப்பட்டது.

### 3.5 திண்மக்கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள் மட்டுமே சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தனவேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தைச் செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்க்கான மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 5,846 தொடக்கம் 2,610,732 வரையான அல்லது 12.5 தொடக்கம் 29 சதவீதம் வரையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றுக்கிடையே ரூபா 723,580 தொடக்கம் 562,481 வரையான அல்லது 18 தொடக்கம் 12 சதவீதம் வரையானவேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபையில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டு மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்குப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்க தவறியமை. |
| | | (ii) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களினை உரியவாறு வருமானப்பதிவேட்டிற்கு பதிவு செய்யத்தவறியிருந்தமை. |
| (ஆ) | சொத்துக்கள்/ ஆதனம் | | சபைக்கு உடமையாக்கப்பட்டிராத 32 வாகனங்கள் கடந்த 01 தொடக்கம் 07 வருடங்களாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்தமை |
| (இ) | அரசிறைக்கடன்பட்டோர் | | அரசிறை நிலுவைகளின் வயதுப் பகுப்பாய்வினை தயாரிப்பதற்கு தவறியமை. |
| (ஈ) | மனிதவளங்கள் முகாமைத்துவம் | | வெற்றிடமாயுள்ள பதவியணிகளுக்கு உரியவாறு ஆட்சேர்ப்பு செய்யத்தவறியமை. |
| (உ) | செயற்திட்டங்கள்/ ஒப்பந்தங்கள் | | மீளாய்வாண்டுக்கு முன்னைய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட மூலதன வேலைத்திட்டங்கள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை |